ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2455/ 09 - 2025 සැප්තැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.09.23
2455/09 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2024, மாச்சு மாதம் 07 ஆம் திகதிய 2374/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக் கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/17/2023/D/78.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : 4/1/ඉ.අත්./
කො.ආ. මණ්/ 114/2023.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 11.


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 723 ரணவன கிராம அலுவலர் பிரிவில், அட்டமுனே மற்றும் ரணவன ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2023.11.24 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இல. KU/MLL/2023/495 இல் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுளின் எல்லைகள் :

**01. துண்டு “ A” – ரணவன / ரணவனவத்தை - விஸ்தீரணம்: 1.8958 ஹெக்டயார்**

வடக்கு : ஆ. வ. கு. 263 இல் துண்டு இல. 4; கிழக்கு: ஆ. வ. கு. 263 இல் துண்டு இல. 4, 1 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு B; தெற்கு : துண்டு B; மேற்கு : துண்டு B மற்றும் ஆவ.கு, 263 இல் துண்டு இல. 1.

**02. துண்டு “B” – அட்டமுனே/ரணவனவத்தை - விஸ்தீரணம்: 16.3151 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு C, ஆ.வ.கு. 263 இல் துண்டு இல. 1, இந்த வரைபடத்தில் துண்டு A மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு : ஆ.வ.கு. 263 இல் துண்டு இல. 1, ஆ.வ. A 984 இல் துண்டு இல. 2 மற்றும் எல். எம். ஜயவர்தன மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் தும்மலபிட்டிய மற்றும் ஹும்பஸ்முனேவத்தை; தெற்கு : எல்.எம்.ஜயவர்தன மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் தும்மலபிட்டிய மற்றும் ஹும்பஸ்முனேவத்தை மற்றும் வீதி (பிரதேச சபை); மேற்கு: எச்.பி. விஜேகோன் உரிமைகோரும் அம்பகஹமுலபிட்டிய, பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு C.

**03. துண்டு “ D ” – அட்டமுனே/ரணவனவத்தை - விஸ்தீரணம் : 1.9471 ஹெக்டயார்**

வடக்கு : ஆ.வ.கு. 263 இல் துண்டு இல. 1; கிழக்கு : ஆ.வ.கு. 263 இல் துண்டு இல. 1. இந்த வரைபடத்தில் துண்டு C மற்றும் பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு; தெற்கு: பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு E; மேற்கு : பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு மற்றும் ஆ.வ.கு. 263 இல் துண்டு இல. 1.

**04. துண்டு “F” – அட்டமுனே/ரணவனவத்தை - விஸ்தீரணம் : 0.0763 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு E; கிழக்கு : பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு; தெற்கு : பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு; மேற்கு : பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு.

EOG 09 - 0213